ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2023 ஒத்தோபர் 27 |

# இலங்கை மத்திய வங்கி-ஆசிய அபிவிருத்தி வங்கி நிலையம்-ஆசிய பசுபிக் பிரயோக பொருளியல் அமைப்பு என்பவற்றிற்கிடையிலான நான்காவது இணைந்த செயலமர்விற்கு இலங்கை மத்திய வங்கி இணை அனுசரணை வழங்கியது.

இலங்கை மத்திய வங்கி-ஆசிய அபிவிருத்தி வங்கி நிலையம்-ஆசிய பசுபிக் பிரயோக பொருளியல் அமைப்பு என்பவை தொடர்ச்சியாக நான்காவது தடவையாகக் கூட்டிணைந்து 2023 ஒத்தோபர் 27ஆம் திகதியன்று மத்திய வங்கியின் ஜோன் எக்ஸ்டர் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற செயலமர்விற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிலையம் மற்றும் ஆசிய பசுபிக் பிரயோக பொருளியல் அமைப்பு என்பவற்றுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கி இணை அனுசரணை வழங்கியது. இவ்வாண்டிற்கான மாநாடானது *'ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் நாணயக் கொள்கை மற்றும் மத்திய வங்கித்தொழில் பிரச்சனைகள்'* எனும் கருப்பொருளின் கீழ் நடைபெற்றது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி நந்தலால் வீரசிங்க தனது ஆரம்ப உரையில் உலகெங்கிலுமுள்ள பல நாடுகள் எதிர்கொள்கின்ற பல்வேறு சிக்கல்தன்மையிலான சவால்களை எடுத்துரைத்தார். இச்சவால்கள் முதன்மையாக மந்தமான மற்றும் சீரற்ற உலகளாவிய பொருளாதார மீட்சி, உயர்வடைந்து செல்கின்ற பணவீக்கம் மற்றும் புவியியல்சார் அரசியல் பதட்டங்கள் என்பவற்றிலிருந்து தோற்றம்பெறுகின்றன. இக்காரணிகள் மத்திய வங்கிகள் அவற்றுடன் தொடர்புடைய பொருளாதாரங்களை உறுதிப்படுத்துகின்ற பணிக்கு முன்னுரிமையளிப்பதற்கு நிர்பந்திக்கின்றன. மேம்பட்ட மற்றும் தோற்றம் பெற்றுவருகின்ற சந்தைப் பொருளாதாரங்கள் ஆகிய இரண்டும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற நுணுக்கமான சமநிலைப்படுத்தும் செயலினை முடக்கும் வேளையில் ஒட்டுமொத்த பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினையும் சமகாலத்தில் நிலைநிறுத்தும் வேளையில் வளர்ச்சியடைந்து வருகின்ற ஐயப்பாட்டினை பகிர்ந்துகொள்கின்றன என்பதனை அவர் வலியுறுத்தினார். மேலும், உலகளாவிய பொருளாதார முறைமையிலுள்ள தற்போதைய உயர்ந்தளவிலான தளம்பல்களுக்கு மத்தியில் பொருளாதாரங்களினால் எதிர்கொள்ளப்படுகின்ற பன்முகத்தன்மையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு கல்வியலாளர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையிலான ஆய்வுக் கூட்டிணைப்புக்களை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தினை அவர் எடுத்துரைத்தார். ஆசிய அபிவிருத்தி வங்கி நிலையத்தின் பீடாதிபதி மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் டெட்ஷுசி சோனோபி தொடக்க உரையினை வழங்கியதுடன் நிதியியல் உறுதிப்பாட்டுக் கரிசனைகளினால் தூண்டப்பட்டு பன்முக நெருக்கடிகளைக் கொண்ட காலப்பகுதிகளில் தோற்றம்பெற்று வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களின் சூழலில் நாணயக் கொள்கையின் நடத்தை எந்தளவு சவாலானதாகவிருக்கும் என்பதனைக் குறித்துக்காட்டினார். கல்வியலாளர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்குமிடையிலான உரையாடலைத் தூண்டுவதற்கும், நாணயக் கொள்கை தொடர்பான ஆராய்ச்சியின் மேலதிக அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கும் இவ்வாறான செயலமர்வுகள் துணைபுரியுமென்பதனை அவர் வலியுறுத்தினார். ஆசிய பசுபிக் பிரயோக பொருளியல் அமைப்பின் தலைவர் பேராசிரியர். பரேஷ் நாராயண் தனது உரையை நிறைவு செய்யும் போது வளர்ச்சியடைந்து

வருகின்ற சந்தைப் பொருளாதாரங்கள் மீதான நாணயக் கொள்கைத் தாக்கங்கள் குறித்த ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டி, கொள்கை சார்ந்த ஆராய்ச்சியை மேம்படுத்துவதில் இத்தரத்திலான ஆய்வுக் கூட்டிணைப்பு முயற்சிகளின் தேவைப்பாட்டினை வலியுறுத்தினார்.

மாநாடானது இலங்கை மத்திய வங்கியிலிருந்தான ஆராய்ச்சியாளர்களினதும் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திலுள்ள பல்வேறு நாடுகளிலிருந்தான ஏனைய ஆராய்ச்சியாளர்களினதும் ஆய்வுக் கட்டுரைச் சமா்ப்பிப்புக்களின் மூன்று அமா்வுகளை உள்ளடக்கியிருந்தது. இவ்வமா்வுகள் ஆசிய அபிவிருத்தி வங்கி நிலையத்தின் ஆராய்ச்சிக்கான துணைத் தலைவா் முனைவா் ஜோன் பெயா்ன் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் மூத்த துணை ஆளுநா் திருமதி ரி எம் ஜே வை பி பா்னாந்து மற்றும் இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநா் திருமதி. கே எம் ஏ என் டவுலகல ஆகியோரினால் தலைமை தாங்கப்பட்டன.




*இடமிருந்து முன் வரிசை:* முனைவா். எல் ஆா் சி பத்பேரியா (பொருளாதார ஆராய்ச்சியின் மேலதிகப் பணிப்பாளா்), முனைவா். பி கே ஜி ஹரிஸ்சந்திர (பொருளாதார ஆராய்ச்சியின் பணிப்பாளா்), திருமதி. கே எம் ஏ என் டவுலகல (துணை ஆளுநா்), பேராசிரியா். பரேஷ் நாராயண் (ஆசிய பசுபிக் பிரயோக பொருளியல் அமைப்பின் தலைவா்), முனைவா். பி. நந்தலால் வீரசிங்க (ஆளுநா்), பேராசிரியா் டெட்ஷுசி சோனோபி, (ஆசிய அபிவிருத்தி வங்கி நிலையத்தின் பீடாதிபதி மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி), முனைவா். ஜோன் பெயா்ன் (ஆசிய அபிவிருத்தி வங்கி நிலையத்தின் ஆராய்ச்சிக்கான துணைத் தலைவா்), திருமதி. ரி எம் ஜே வை பி பா்னாந்து (மூத்த துணை ஆளுநா்), திரு. ஏ ஆா் கே விஜயசேகர (உதவி ஆளுநா்) மற்றும் முனைவா். எஸ் ஜெகஜீவன் (பொருளாதார ஆராய்ச்சியின் மேலதிகப் பணிப்பாளா்).

*இடமிருந்து பின் வரிசை:* முனைவா். எம் எம் ஜே டி மஹீபால (இலங்கை மத்திய வங்கி), செல்வி. சூசன் சுனிலா ஷா்மா (இணைப் பேராசிரியா், டீக்கின் பல்கலைக்கழகம்), திரு. பவேஷ் காா்க் (இணைப்

பேராசிரியர், இந்திய ரோபர் தொழில்நுட்ப நிறுவனம், இந்தியா மற்றும் ஆசிய பசுபிக் பிரயோக பொருளியல் அமைப்பு), பேராசிரியர். எஸ் ராஜா சேது துரை (பேராசிரியர், ஹைதராபாத் பல்கலைக்கழகம்), முனைவர். கே பி பிரபீஷ் (இணைப் பேராசிரியர், இந்திய தொழில்நுட்ப நிறுவனம்), பேராசிரியர். விக்னேஸ்வர சுவாமி (பேராசிரியர் மற்றும் ஆராய்ச்சிப் பீடாதிபதி, உயர் கல்விக்கான இந்தியாவின் பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர் நிறுவனம்), திரு. நூபு ரெஞ்சி (இணைப் பேராசிரியர், பொருளாதாரம் மற்றும் வணிக கெபிடல் பல்கலைக்கழகம்), முனைவர். ஆர் டி திலினி சுமுது குமாரி (இலங்கை மத்திய வங்கி), திருமதி தேஜா பத்பேரிய (இலங்கை மத்திய வங்கி) மற்றும் திருமதி. ஷமிலி குணவர்தன (இலங்கை மத்திய வங்கி).